The Morning Star
CACM Head Office
Christian Theological Seminary
Maruthanarmadam
Chunnakam
Sri Lanka.

# The Morning Star

Established 1841
A Christian Publication
Vol. 171 - Jaffna - Friday 04th February 2011 . No.2
*Righteousness Exalteth A Nation. But Sin is a Reproach to any people.*

Subscribtion Rs.10/=
(postage Seperate)
Please send your News & Articles to
**The Editor
The Morning Star,
Maruthanarmadam,
Chunnakam.**
Email:
cacm.themorningstar@gmail.com

# கிழக்கு மக்கள் வாழ்வில் திரும்பவும் விழுந்தது பேரிடி! வெள்ளத்தில் மூழ்கியது மட்டு அம்பாறை பிரதேசங்கள்!!

**வருடத்தின் தொடக்கத்திலேயே கிழக்கு மக்களின் நடைமுறை வாழ்வு கால நிலைச் சீர் கேட்டால் முடக்கப்பட்டமையானது அம்மக்களை பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.**

**தொடர் மழையும் பெரு வெள்ளமும் மக்களை நிர்க்கதியில் உறைய விட்டுள்ளது. பொருளாதார அழிவு மட்டுமின்றி உயிரிழப்புக்களையும் அனுபவித்த சோகத்திலிருந்து மக்கள் இன்னும் மீளவில்லை. இலங்கை வரலாற்றில் அதிகூடிய மழை வீழ்ச்சி இவ்வருடமே பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.**

பல இலட்சக்கணக்கான மக்கள் தமது சொந்த வாழ்விடங்களைவிட்டு இடம் பெயர்ந்து பாடசாலைகளிலும் ஆலயங்களிலும் தஞ்சம் புகுந்தனர். போக்குவரத்துப்பாதைகள் தடைப் பட்டதால் விநியோகங்களும் பாதிக்கப்பட்டன. இதனால் மக்கள் உணவு பற்றாக்குறை இருப்பிட இழப்புக்கள் சுகாதார சீர்கேடுகள் வைத்திய வசதியின்மைகள் வங்கி மற்றும் கல்விச் செயற்பாடுகள் தடைபட்டமை போன்ற சவால்களை எதிர் கொண்டனர். வரலாறு காணாத வெள்ளம் என கிழக்கு மாகாண மக்கள் வர்ணித்ததை காணக்கூடியதாக இருந்தது. தொடர்ந்தும் சிரற்ற கால நிலையே நிலவுகிறது.



அராலி திருச்சபையில் பாலர் பாடசாலையும் மாலைநேர வகுப்பும்.

அராலி திருச்சபையில் பாலர் பாடசாலையும் மாலைநேர வகுப்பும் 21-01-2011 அன்று மாலை 05:00 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

அராலி அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை வளாகத்தில் அமைந்துள்ள "லம்போத் மணடபம்" மீண்டும் பாவனைக்காக திருத்தி திறந்து வைக்கப்பட்டதோடு அதில் பாலர் பாடசாலையும் மாலை நேர வகுப்பும் அதே நாளில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சபை நிர்வாகத்தினரும் சபை போதகர் வண.ரி.ஈ.அசோக்குமார் அவர்களும் இணைந்து இதற்கான சகல முயற்சிகளையும் எடுத்திருந்தனர். இதற்கான நிதியுதவியினை வழங்குகின்ற இத்திருச்சபையின் அங்கத்தவரும் சட்டத்தரணியுமான திரு.மனோ தேவசகாயம் அவர்களே இம்மண்டபத்தை திறந்து வைத்தார்.

(6ம் பக்கம் பார்க்க..)

## வடபிராந்தியத்திலிருந்து கிழக்கிற்கு வெள்ள நிவாரணம்

அண்மையில் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட பெரு வெள்ளம் காரணமாக 9 லட்சம் பேர்வரை இடம்பெயர்ந்து பல இன்னல்களை அனுபவித்தனர். இவர்களுக்கான நிவாரண உதவிகளையும் செய்வதில் பல இடையூறுகள் காணப்பட்டன. மழை நின்று சில நாட்களுக்குள்ளேயே வெள்ள நீர் வழிந்தோடி விட்டது. அதன் பின்னரே நிவாரண பணிகள் ஆரம்பிக்கப்பட்டது.

அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையும் நிவாரணப்பணிகளில் மும்முரமாக ஈடுபட்டுவருகின்றனர். இவர்களுக்கு கை கொடுக்கும் வகையில் யாழ்.பிராந்தியத்தினர் பல கோணங்களில் செயற்பட்டு நிவாரணங்களை சேர்த்து அனுப்பினர். ஒவ்வொரு சபைகளிலும் அவர்களின் நல்ல சமாரியன் கொடைகளில் இருந்து ஒதுக்கும்படியும் ஒவ்வொரு சபை மக்களும் தங்கள் பங்களிப்பை வழங்கும்படியும் அறிவிக்கப்பட்டது. அத்தோடு துண்டுப்பிரசுரம் மூலம் ஒவ்வொரு திருச்சபை கிராமங்களிலும் வீடு வீடாக நிவாரணங்கள் சேர்க்கப்பட்டது.

இதன் மூலம் பெறப்பட்ட நிதிகளும் நிவாரணப் பொருட்களும் கிழக்குப்பிராந்திய திருச்சபைத்தலைவர் வண.பி.ஆர்.நவேந்திர அனுகூலன் அவர்களின் கைகளில் ஒப்படைக்கப்பட்டது. இது தவிர பொழும்பு CACM திருச்சபையினரும் நிதி சேகரித்து அனுப்பியிருந்தனர். அந்நிதிகளைக் கொண்டு உலர் உணவுகள் வாங்கப்பட்டு அவைகள் பொதிசெய்யப்பட்டு மட்டக்களப்பு புணாணைக்குக் கிழக்குப்பக்கமாக பிரதான வீதியிலிருந்து 8 கி.மீ தொலைவில் உள்ள

(6ம் பக்கம் பார்க்க..)

## பழைய ஏற்பாட்டு அறிமுகம்

**தொடர் கருத்தரங்கு**



மருதனாமடம கிறிஸதவ இறையியல் கல்லூரியில் கடந்த 19-01-2011 புதன் கிழமை தொடக்கம் 25-01-2011 செவ்வாய் கிழமை வரை தொடர் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. பழைய ஏற்பாட்டின் ஐந்தாகமத்தை (தோரா) அடிப்படையாகக் கொண்டு அவுஸ்ரேலியா கண்டத்தின் தீவுகளில் ஒன்றான டொங்கா என்ற நாட்டிலிருந்து வருகை தந்த பேராசிரியர் '**ஷியோனே ஹேவா** (Prof.Jione Havea) அவர்களால் இக்கருத்தரங்கு நடாத்தப்பட்டது. இவர் அவுஸ்ரேலியாவின் வட பரமேற்றாவில்(Charles Sturt University, North Parramatta, Australia) உள்ள ஐக்கிய இறையியல் கல்லூரியில் எபிரேய திருமறை குறித்த பாடப்பரப்பில் சிரேஷ்ட விரிவுரையாளராக கடமையாற்றுகிறார். இவருடைய மனைவி வண.கலாநிதி.மொனிக்கா ஜொஸ்ட்னா மெலன்தன் (Rev.Dr.Monica Jyotsna Melanchthon) இந்தியாவில் உள்ள குருகுல் இறையியல் கல்லூரியில்(Gurukul Luthern Theological College & Research Institute, Chennai) பழை ஏற்பாட்டு போரசிரியராக இருப்பதுடன் பெண் விடுதலை இறையியலாளராகவும் கடமையாற்றுகின்றார். இவர்கள் எமது இறையியல் கல்லூரியின் இறையியல் கல்விக்கான இயக்குனர் கலாநிதி.தர்ஷன் அமபலவாணர் அவர்களின் நண்பர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கருத்தரங்கில் குருமாராக, பொது நிலையினராக 60 பேர் கலந்து கொண்டதோடு கிரமமாகக் கலந்துகொண்ட 32 பேர் சான்றிதழைப் பெற்றுக்கொண்டனர். சான்றிதழைப் பெற்றவர்களுக்கு அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையினுடைய பாடல் புத்தகமும் ஜெபப்புத்தகமும் அன்பளிப்பாக கொடுக்கப்பட்டது.

இறுதி நாளான 25-01-2011 அன்று சான்றிதழ் வழங்கும் வைபவம் இறையியல் கல்லூரி பிரதி அதிபர் வண.ஏ.எஸ்.தேவகுணானந்தன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இறையியல் கல்லூரியின் மாணவர் நலன் துறைக்காப்பாளர்

(6ம் பக்கம் பார்க்க..)

# உதய தாரகை

## இயற்கையின் சீற்றம்

கடவுள் உலகத்தை படைத்து மனிதனின் கையில் ஒப்படைக்கும்போது மனிதனுக்கு இட்ட கட்டளை "பண்படுத்துங்கள்". இதனைத்தான் பல விஞ்ஞானிகளும் பல தடவைகள் மக்களுக்கு எடுத்துரைத்து வருகின்றனர். இயற்கையை அழிக்கவேண்டாம், அவற்றை பாதுகாத்து பண்படுத்துங்கள் போன்ற பல ஒலிகள் நம் காதுகளில் கேட்காமல் இல்லை. இருந்தும் மனிதர்களாகிய நாம் நம் சுயநலத்தாலும் அலட்சியபோக்காலும் அவ் ஒலிகளை காதில் விழுத்திக்கொள்வதில்லை.

இன்று அதன் பிரதிபலனை அனுபவித்தே ஆகவேண்டும். 2004 டிசெம்பர் மாதம் ஏற்பட்ட சுனாமிக்குப்பின் 2010ன் இறுதிப்பகுதியில் ஆரம்பித்த இயற்கையின் சீற்றம் இன்னும் தணிவதாக இல்லை. வரலாறு காணா பெரு வெள்ளத்தோடு ஆரம்பமாகி 25-01-2011 அன்று திருகோணமலை உப்புவெளியில் பாரிய சத்தத்தோடு ஏற்பட்ட குழி, 26-01-2011 அன்று நிந்தவூரில் பாரிய சத்தத்தோடு ஏற்பட்ட 7 அடி ஆழம் கொண்ட குழி, 28-01-2011 அன்று மாங்கேணியில் சுழல் காற்றினால் 3 வீடுகள் முற்றாக சேதம், 29-01-2011 அன்று மூதூர் பகுதியில் ஏற்பட்ட மினி சூறாவளி, மீண்டும் மட்டு, அம்பாறை மாவட்டங்களில் மழை என தொடர்ந்து கொண்டே போகின்றது.

இவ்வழிவுகளுக்கு முன்பதாக இயற்கையின் சில சமிக்ஞைகள் கூட காட்டப்பட்டது யாவரும் அறிந்ததே. அதாவது 2004ம் ஆண்டு சுனாமிக்கு முன் மட்டக்களப்பு கல்லடி பாலத்தின் கீழ் நூற்றுக்கணக்கான பாம்புகள் தங்கள் இருப்பிடத்தை விட்டு நகர்ந்தன. அதே போல் 2010 வெள்ளத்திற்கு முன்னும் கூட அதே சமிக்ஞை தென்பட்டபோது அனைவரும் சற்று விழிகளை உயர்த்தினாலும் பின் அசட்டையாக இருந்துவிட்டனர்.

இவையெல்லாவற்றிற்கும் என்ன காரணம் என்று நம் அனைவருக்கும் கேள்வி எழும்பலாம். சில வேளைகளில் கடவுள் தான் நம் அனைவரையும் அழிக்கப்போகிறார் என்ற செய்திகளை கேட்டிருக்கலாம். முதலில் நம் பிழைகளை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். கடவுள் நமக்கு அளிக்கும் இரக்கத்திற்கு எல்லை கிடையாது. கடவுள் ஒழுங்காக படைத்த படைப்புக்களை நாமே குழப்புகின்றோம் என்பதை நன்கு உணர்ந்து கொள்ளுவோம். இதனால் நாமே நம்மை அழித்துக் கொள்கின்றொம். இது தான் உண்மை. இதனை ஒவ்வொரு மனிதனும் உணராதவிடத்து இவ்வழிவுகளில் இருந்து யாரும் தப்பித்துக்கொள்ள முடியாது.

சில வேளைகளில் நாம் என்ன செய்தோம் என்று நம்மை நாமே நொந்து கொள்ளலாம். இயற்கையை பாதுகாக்காமை என்பது ஒரு தனி மனித பாவம் என்பதற்கு மேலாக அது சமூக பாவமாகவே கருதப்பட வேண்டும். ஏனெனில் ஒருவன் இயற்கையை அழித்தாலும், வரும் விளைவு அனைவருக்கும் பொதுவானது. இதனை அறிந்தும் எனக்கென்னவென்ற அசதியாக இருப்பதும் நாம் விடுகின்ற தவறுகளாகவே கணிக்கப்பட வேண்டும்.

## இளையோர் ஒன்று கூடல்

கிறஸ்தவ ஒன்றிப்பு வாரத்தை முன்னிட்டு 10-02-2011 அன்று பெரிய நீலாவணை புனித.அந்திரேயா ஆலய இளையோர்களும் உயர் தர மாணவர்களும் ஒன்றிணைந்து "பொறுப்புணர்வும் சூழல் பாதுகாப்பும்" என்ற தலைப்பில் ஒரு நாள் ஒன்று கூடல் ஒன்றை நடாத்தவுள்ளனர்.

## வெள்ள நிவாரணம்

கடும் மழை, வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண மக்களில் பின்வரும் பகுதிகளைச் சேர்ந்த சுமார் 1500 குடும்பங்களுக்கு முதல் கட்ட விநியோகத்தில் உலர் உணவுப் பொதிகள் கொடுக்கப்பட்டன. பெரியநீலாவணை, கல்லாறு, ஊறணி, முறக்கொட்டான்சேனை, கித்துள், தும்பிளாஞ்சோலை, ஓமடியாமடு, ஆலங்குளம், இறாலோடை போன்ற கிராம மக்களுக்கு குறிப்பிட்ட நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டன.

## விடிவைத் தேடியே!

வெறி கொண்ட காலத்தின்
வேதனைகள் பலநூறு
கண்களை மூடி நின்றால்
காட்சிகளாய் வந்து நிற்கும்
இன்னல்கள் அகலாமலென்றும்
இமயமாய் உயர்ந்து நின்று
கண்களில் கரையும் நீர்கள்
கரைகளையே தொடர்ந்து செல்லும்

மானங்கள் இழந்துபோக
மதிப்பிழந்த நிலைகள் சேர்ந்து
காலத்தின் துயர் வடுக்கள்
கறையாகப் படிந்துகொள்ள
ஊனங்களான உடல்கள்
வேதனைகளின் விதைகளவை
விழுந்து பல விருட்சமாகி
கண்ணீரின் துயர்களையே
கவலைகளாய் பூத்து நிற்கும்

கோபுரமாய் கொலுவிருந்த
வாழ்வுகளோ இன்று முள்
வேலிக்குள் முடங்கி விட்ட
வேரறுந்த நிலைகளோடு
பொய்களையே கேட்டுக்கேட்டு
புளித்து விட்ட காதுகளாய்
ஒன்றுமே இல்லாமல்
ஒட்டிவிட்ட வயிறுகள்
விடியுமா இந்த நிலை?
முடியாத பெருமூச்சாய்
காலமே கண்திறக்க
கடவுளையே வேண்டுவோம்.

அ.இராசமலர்
பெரிய கல்லாறு

## காலத்தின் பேதம்.

புயலுக்குள் இதம் தேடும்
புதிரான உலகத்தில்
நெஞ்சை உறுத்துகின்ற
நெருஞ்சில்கள் போன்றோரும்

காற்றுக்குப் பறக்கடிக்கும்
பதரைப் போல் சில பேரும்
சந்தர்ப்பம் பார்த்திருந்து
சதி செய்யும் சாக்கடையரும்

பதவிக்கு விலை போகும்
பண்பற்ற பல பேரும்
மானம் பெரிதென எண்ணும்
மாசற்ற சில பேரும்

பட்டம் பதவிக்காய்
திட்டம் பல தீட்டி
சத்தியத்தை புரட்டும்
சத்தியத் துரோகர்களும்

மேதினியில் உலா வர........

கல்லுக்குள் ஈரம் கொண்ட
கனிவான மனம் கொண்டு
உன் இரைக்கே உறையுளாகும்
உன் செயல் உணர்த்துவது

காலத்தின் பேதமா......? அல்லது

கண்ணிருந்தும் குருடரான
கண் கெட்ட மனிதருக்கு
கடைசித் தீர்ப்புக்கு
கடவுளின் வருகையா.......?

எஸ்.திலீஸ்
CACM உடுவில் திருச்சபை

## கவிக்களம்

பரிசுக்குரிய கவிதை



போட்டி இல.2

## திருந்துவாயா?

பாரடா மானிடா நீயும்
பகுத்தறிவு அற்ற உயிரினம் அதை
உன் மிருகக் குணம் போக்குவதற்கு
மிருக இனம் புகட்டும் மனிதப்பாடமிது

மனித நேயம் பட்டு கருகிவிடும் நேரத்திலா?
மிருக நேயம் வளர்ந்தது இங்கே - ஏன்
மனிதவாழ்வதைப் பார்த்து பாடம் புகட்ட எழும்
நீயும் ஓர் பகுத்தறிவு அற்ற ஜீவனல்லவோ?

ஓகோ........... இது தான் சங்கதியோ
மனிதன் தூக்க வெட்கும் வேதத்தை படித்தாயோ?
கடவுளின் வார்த்தை உனக்கு விளங்கி விட்டதோ?
கடவுளின் வரவை நீ அறிந்து விட்டாயோ?

உன்னையாவது பார்த்து மனிதன் மாற
அவனுக்கு பாடம் புகட்டுகிறாயோ - அல்லது
வெள்ளத்தால் இடம்பெயர்ந்த இவ் இனத்துக்கு
மனமார நிவாணம் கொடுக்கிறாயோ?

எதுவாயினும் கவலை தான் எமக்கு
கடவுள்வருகை தாமதமும் இயற்கை சீற்றமும்
கண்கலங்க வைக்கும் மனிதனின் செயல்களும்
உன்னை பார்த்தாவது மனிதனினி திருந்தட்டும்

S.P.ஜோன் விஜயதாசன்
C.T.S

## சிறுத்தைக்கே மறக்காத சிந்தனை

சிறுத்தைகள் ஆடுது
விளையாடுது மானோடு அங்கே
செருக்கன்கள் கிறுக்கன்கள்
வீழ்த்தியது மனுவுடலை இங்கே

உயிர் வரும் என்று வந்தவரை - அன்று
உயிர் வெறும் உடல் தானென்று
மனு நீதி மறந்து மண்ணில் வீழ்த்தி நன்று
மிதித்து விட்டீர்களே இன்று


பாவிகளே இந்நாட்டின் ஆவிகளே.......
சிறுத்தைக்குக் கூட மறக்காத சிந்தனை
சிவந்த மேனி கொண்ட உனக்கேனடா வந்தது
எண்ணிப் பார்த்திருந்தால் தெரிந்திருக்கும் உனக்கு

மனம் நெகிழ்ந்து வந்தவரை
மண்ணாக்கி மகிழ்ந்தனையோ
மன்னிக்கத் தெரியாத மனிதர்களே!
சிந்திக்கத் தெரியாத சித்தர்களே!

மன்னிக்கப் பழகு மனித குலம் மாறிவிடும்
மாண்பு மிகு புது உலகாய்
புலராத புதுப் பொழுதுகள்
பனித்துளிகளாகும் காத்திருப்போம்

P.விக்டர்
C.T.S

## இந்த வாரம்




### போட்டி இல.3

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை எழுதி அனுப்புங்கள். தரமானவை பிரசுரிக்கப்படும். தரமான ஒரு கவிதைக்கு பரிசு வழங்கப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி
கவிக்களம்
உதய தாரகை
கிறிஸ்தவ இறையியல் கல்லூரி, மருதனார்மடம்
சுண்ணாகம்.

முடிவு திகதி 28-02-2011

# The Morning Star



## What is meant by the grace of God?



When we speak of God's grace, we mean all the good gifts we enjoy freely in life. There are so many. We could spend a lifetime celebrating them: blackberries, buttercups, moonlight, salamanders, etc. A more summary approach is to affirm that life itself is the fundamental gift, with all its delights. For us, the gift of life includes the wondrous gift of being human, finding ourselves plopped down in the midst of the larger gift of creation. That is the bedrock of grace—creation, life, human being. As humans, we are given a unique place in the created order. The creation stories in Genesis are ways of celebrating this original grace. In the stories, God pronounces all creation, including humankind, very good, that is, full of grace.

We also use the word grace to mean the secondary gifts we perceive in the skill and intelligence of creatures. The gospel says the boy Jesus grew in grace and favor, meaning he began to exhibit his unique personality and potential to contribute to his community. We speak of the beauty of a lion or a dancer, saying they exude an animal grace, discerned in the vitality and fluidity of their movement. When we use the word graceful to describe a creature, it's because the creature is being expressive of its God-given self.

There is another way of speaking about grace that is more about redemption than about creation. Whereas God pronounced original grace, the other side of the story is when we head off on our own, ignoring the Giver. This headstrong straying we have called *original sin*, meaning our freedom to choose the not so good, to turn aside from original grace. Ironically, this freedom is itself the most unique grace given humankind by God, the capacity to choose our own way, which must necessarily entail the possibility of choosing poorly. Because we have not always chosen the most graceful path, we have ended up in some miserable, blind alleys along the way. When we grasp our predicament and call for the help we had previously spurned, amazing grace comes to the rescue.

**As in the beloved old hymn, the amazing kind of grace is God's gift of redemption, the grace which prompts us to repent, causing us to think again when we find ourselves in a bad way, and which prompts us to return, putting us back on a more godly path.** This turning and returning we call conversion. As another simple hymn says, conversion is turning, turning, til we come round right. When we forget grace and our need of it, amazing grace prompts our memory and then upholds our will, our intention to right our lives, to make amends. The process of continual conversion is the grace most associated with the Holy Spirit. It is also called sanctifying grace. The action of this kind of grace is summarized as repentance, confession, and amendment of life. We rely on grace to make us whole, personally and communally, over time.

Redemptive grace is focused most clearly in the life, death, and resurrection of Jesus of Nazareth, whom Christians call Christ, meaning the one chosen to deliver this particular grace. We might refer to Jesus as Grace himself, as Grace in the flesh, as Grace walking around. The grace of Christ can inspire us in such a transformative way as to change our awareness of ourselves, of our potential as human beings and as humankind, and our awareness of God's gracious purpose for us and through us for all creation. It is this changed awareness which recognizes a still more specialized form of grace—the grace made available to all who choose to serve God's hope for all in Christ. This is the grace which makes us disciples and is available as spiritual power for goodness' sake. Jesus exhibited this kind of power and challenged us to do the same.

The spiritual power demonstrated by Jesus, and the saints who have sought to imitate his cooperation with God, is the energy which continues to heal the world, to bring it into more and more wholeness. This specialized grace is available to any who want to offer themselves in gratitude, to enlist in God's vision for humankind and to discover our proper place in creation as we serve. This is the grace that makes us into earth stewards for Christ's sake. This grace is the assistance given us when we choose to become the people that God means us to be, giving ourselves over to whatever goodness we are meant to create, to redeem, to sustain. This kind of grace comes with the breathtaking awareness that we are participating in the very life of God, and it's awesome good!

**—The Rev. Dr. Katherine M. Lehman**

# Peace Pooranampillai

## 'the veritable better half'

### An Appreciation



Peace Pooranampillai, the spouse of the late K.Pooranampillai passed away recently in Kent,U.K. She was a very kind lady who used her influence to help the poor and the needy. She cared for the kids in the college hostel near her home and sent specially prepared meals for boys who had come to the hostel from far away places like Batticaloa and the highlands.

Madam Peace was also an asset to the church which she attended regularly. She enriched the music by making use of her talents with the violin.

The late Mrs. P was a very hospitable lady. Whoever came to visit her was well entertained and made to feel homely and happy.

As a principal's wife, she helped the students in her own inimitable ways. The hostel students used to have a sing-song session every Sunday evenings and she is the one who led the singing and treated them with her 'date sweets'. Her benevolent frame of mind made the boys to long for such delightful Sunday evenings. Whenever there were school parties, Peace volunteered to make eats; besides she also graced the occasions with her sweet presence.

The Tamil writer and sage, Valluvar in his definition of an ideal woman says 'that kaathu ,that kondan peeni, Chot kaathu , soorvilal Penn'. The right woman has the ability to safeguard herself, serve her partner, careful in her utterances and never found wanting in swiftness'. The late Peace Pooranampillai had all these attributes in sufficient measures. Now that she is no more, she leaves a fragrance of sweetness and grace in the minds of all those who knew her.

**PNJ**



It is not how much
we do,
but how much love
we put in the doing.

It is not how much we give
but how much love we put
in the giving.

Mother Teresa

## உத்தரவாதம் நிறைந்த இறை சேவையாளன் திரு.ஜே.லைமன் அவர்கள்

- அருள் திரு.வி.இராஜ்குமார் அவர்களது அருளுரையின் சுருக்கம் -

2தீமோத்தேயு 4:7-8 "நல்ல போராட்டத்தைப் போராடினேன். ஓட்டத்தை முடித்தேன்.நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டுள்ளது, நீதியுள்ள நியாயாதிபதியான ஆண்டவர் அந்நாளில் அதை எனக்குத் தந்தருளுவார். தனது வாழ்க்கையை தான் கடவுளுக்காகக் கொடுக்கப்போகும் காலம் வந்து விட்டது. தனது வாழ்வின் முடிவு சமீபித்து விட்டது என்பதை உணருகிறார். ஆகவே வெற்றியின் நிறைவோடு இதனை எழுதுகிறார். ஆண்டவர் தரவள்ள நீதியின் கிரீடம் தனக்குள்ளது என்ற நிச்சயம் அவருக்கிருந்தது. இந்த உலக வாழ்க்கை என்பது ஓர் போராட்டம், ஓர் ஓட்டம், ஓர் விசுவாசம். இந்த உலகிலே வாழ்கின்ற போது நமது வாழ்க்கையை நிறைவும் வெற்றியின் நிச்சயமுமுள்ளதா வாழவே அழைக்கப்படுகின்றோம். காலம் சென்ற திரு.ஜே.லைமன் அவர்கள் வாழ்க்கையில் நல்ல போராட்டத்தைப் போராடினவர். துன்பங்கள், வேதனைகள், சோதனைகள் மத்தியிலும் இறுதி வரை துவண்டு போகாது உறுதியாக நின்றவர். வாழ்க்கையில் நல்ல போராட்டத்தை ஓடி முடித்தவர். இறுதி வரை நல்ல பொறுப்புள்ள கணவராக, தந்தையாக மட்டுமல்லாது திருச்சபையிலும், வை.எம்.சீ.ஏ இலும் நேர்மையும் உத்தரவாதமுமுள்ள பொருளாளராகப் பணியாற்றியவர். தனது விசுவாசத்தைக் காத்துக் கொண்டவர். அசையாத இறை நம்பிக்கையும் பற்றும் கொண்டவர். தன் திருச்சபையில் பற்றும் கரிசனையும் கொண்டவர். நீதி, நியாயம், உண்மை இவைகளின் பக்கமே எப்போதும் நின்று செயலாற்றியவர். வெளி2:10 இல் வாசிப்பது போல மரணபரியந்தம் உண்மையாய் இருந்து ஜீவ கிரீடத்துக்குரியவராய் வாழ்ந்தவர்.

29-12-2010 அன்று நடைபெற்ற மேற்கண்ட நல்லடக்க வழிபாட்டில் இவரது மைத்துனர்களான வண.எஸ்.சி.ஆணல்ட்(சி.எஸ்.ஐ), வண.எஸ்.கே.கதிர்காமர்(மெதடிஸ்த திருச்சபை), இவரது பேத்தி அருட்செல்வி. சாமினி ஆணல்ட்(சி.எஸ்.ஐ), வண.ஏ.கே.சுரேந்திரன் (சபைக்குரு சி.ஏ.சி.எம்), வண.வி.இராஜ்குமார்(பிராந்தியத்தலைவர் சி.ஏ.சி.எம்), வண.ஏ.ஜெயக்குமாரன்(தலைவர் சி.ஏ.சி.எம்) ஆகியோர் இணைந்து வழிபாடு நடாத்தினர்.



The pictures above are taken at the reopening function of the Lambert Hall in the CACM Church premises, Araly. Pic 1 - Chief Guest cutting the ribon, Pic - 2 Chief Guest & Chairperson, Pic 3 - ACM School principal, Regional Chairperson & Regional project coordinator, Pic 4 - A section of guests

# Araly CACM Church - Lambert Hall Reopened

The Araly church members with the help of the Lambert family rebuilt the old Lambert Hall which was in bad condition. The newly constructed hall was declared opened by the Attorney at Law Mr. Mano Thevasagayam – Member of the Araly CACM church – on the 21st of January 2011 at 05:00 pm. the function was presided by the presbyter of the Araly CACM church Rev.T.E.Ashokumar, regional Chairperson Rev.V.Rajkumar offered the opening prayer, The Chairperson of the CACM Rev.A.Jeyakumaran, The project officer for the Jaffna region Rev.J.Antony Suthakar, The Acting Principal of the C.T.S Rev.A.S.Thevagunananthan, Araly A.C.M – T.M School Principal, Araly Hindu College principal and the Chief Guest Mr.Mano Thevasagayam spoke in the function. Mr.Balu Ashbury proposed the vote of thanks.

The Araly CACM Church proposed to have a Day Care Centre for pre – Schoolers and an English education program as an evening school in this Lambert Hall.

# Kaddupulam Housing



The Church of the American Ceylon Mission undertook build 25 houses to the Tsunami Victims in Kaddupulam - A village in the Chulipuram area. This project was started in 2006 with the help of ACTS International and was abandoned due to the church problem. The villages were badly affected and their demands for housing is reasonable the Global Ministries of UCC, USA came forward to help them through CACM.

This program re-comenced in late 2009. 22 houses have been completed and about to be handed over to the benificiaries in a function to be held in middle of February 2011. This is a benificiaries participatory project. Each house has a Varanadah, a kitchen, Two bed rooms and a detached bathroom. The total floor area of the house alone is 28 X 36 ft. The church provided the material and the benificiaries provided the labour.

## Udapusallawa Children Received Christmas Gift

During the second week of December, Rev.Dr.S.Jeyanesan the former chairperson of the CACM and Mrs.Jeyanesan visited the Udapussalawa CACM center and the places around our center. While visiting, he also presented the poor children of the area with dry ration worth of Rs.60,000/=. He was the Guest speaker at the 3rd in Advent worship service of the Udapussallawa CACM church. Rev.Enoch Punitharajah conducted the service.

## "Positive Attitude"

1. When the Snake is alive, the Snake eats Ants. When the Snake is dead, Ants eat the Snake. Time can turn at any time. Don't neglect anyone in your life........ ...
2. Never make the same mistake twice, There are so many new ones, Try a different one each day.
3. A good way to change someone's attitude is to change our own. Because, the same sun melts butter and also hardens clay! Life is as we think, so think beautifully.
4. Life is just like the sea, we are moving without end. Nothing stays with us, What stays with us are just memories of some people who touched us as Waves.
5. Do you want to know how rich you are? Never count your currency, just try to Drop a Tear and count how many hands reach out to WIPE that - that is true richness.
6. Never change your originality for the sake of others. No one can play your role better than you. So be yourself, because whatever you are, YOU are the best.
7. A baby mosquito came back after flying the first time. His dad asked him "How do you feel?" He replied "It was wonderful, Everyone was clapping for me!" Now that's what is called "Positive Attitude"

## Appeal: Emergency Flood Relief Batticaloa District

Over the last several days the Batticaloa district has been hit by the worst floods in over 50 years. Heavy rains has led to severe flooding in several communities, and the release of waters from reservoirs to prevent breaches in their banks has led to the lagoon level rising and swamping roads and residential areas. Several areas of Batticaloa town itself have been flooded with lagoon waters, road links to Batticaloa have been cut, and numerous villages have been forced to evacuate.

The latest information we have received from official disaster management sources are that 232,571 people have been displaced and 144 welfare centres have been set up. Local government officials have appealed to NGO's and community organizations to support emergency and subsequent relief work.

The CACM would like to participate by providing emergency and relief supplies of dried foods, clothes and supplies of children's educational materials for families hit by the floods. We would like to provide a package of items that will cost Rs.4, 000 per package. Our work will be coordinated with the relevant local government and civil organizations.

We are appealing to individuals and organizations to assist us in providing help to needy communities and to do so by sending funds to us immediately as the urgent need is now, and we need to provide assistance as soon as road communications are restored.

When you send funds please immediately send an email to our address: cacmprojects@gmail.com ,cacmission@gmail.com. Please also state if you would be happy with your name and contribution being listed when we make a public acknowledgement of the funds received or if you would like your contribution to be anonymous.

# International Year of Forests

The year 2011 was declared the **International Year of Forests** by the United Nations to raise awareness and strengthen the sustainable forest management, conservation and sustainable development of all types of forests for the benefit of current and future generations.

INTERNATIONAL YEAR OF FORESTS • 2011

**Sustainable forest management** (SFM) is the management of forests according to the principles of sustainable development. Sustainable forest management uses very broad social, economic and environmental goals. A range of forestry institutions now practice various forms of sustainable forest management and a broad range of methods and tools are available that have been tested over time.


The "Forest Principles" adopted at The United Nations Conference on Environment and Development (UNCED) in Rio de Janeiro in 1992 captured the general international understanding of sustainable forest management at that time. A number of sets of criteria and indicators have since been developed to evaluate the achievement of SFM at both the country and management unit level. These were all attempts to codify and provide for independent assessment of the degree to which the broader objectives of sustainable forest management are being achieved in practice. In 2007, the United Nations General Assembly adopted the Non-Legally Binding Instrument on All Types of Forests. The instrument is the first of its kind, and reflects the strong international commitment to promote implementation of sustainable forest management through a new approach that brings all stakeholders together.



## பாத்தீனிய பயிர்ச்செய்கை?

பாத்தீனியம் என்றவுடன் எல்லோருடைய ஞாபகத்தில் வருவது இந்திய அமைதி காக்கும் படையே. 1987 - 1989 காலப்பகுதியில் இவர்கள் இலங்கையின் சில பகுதிகளில் நிலைகொண்டிருந்தபோது அவர்களுக்கு உணவுக்காக இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட கால் நடைகளின் எச்சங்கள் மூலம் மேற்படிப் பயிரானது யாழ் குடாப்பகுதிகளில் பரந்து வளரத்தொடங்கியது. பின்பு இலங்கையில் உள்ள ஆய்வாளர்களால் இப்பயிர் சுவாசம் மூலம் இருதய நோய்களை கொண்டுவரும் என்று கண்டறியப்பட்டது. இதனால் அரச நிர்வாகமும் பாத்தீனிய ஒழிப்பு வாரம் ஒன்றை பிரகடனப்படுத்தி பல தொண்டர்களை வைத்து இப்பயிர்களை அழித்து வந்தனர். அவர்களின் முயற்சி பலனளிக்காமல் கைவிடப்பட்டது. பொதுமக்களின் அலட்சியதன்மைகளும் அரச நிர்வாகத்தினரை சோர்வடைய வைத்துவிட்டன. இந்நிலையில் நீங்கள் பார்க்கும் படம் மருதனார்மடம் சந்திக்கருகில் அமைந்துள்ள ஒரு காணி. அது முழுவதும் பாத்தீனிய பயிர்ச்செய்கை செய்யப்பட்டிருப்பது போன்று தென்படுகின்றது. ஒவ்வொரு தனி நபரும் தமக்குள்ள சமூக பொறுப்பை உணராதவரை அரோக்கியமுள்ள சமூகத்தை கட்டியெழுப்ப முடியாது.

## அகவை நூறு காண்பர் அரவணைக்கும் தாய்



ஆதரவு அற்றவற்கும்,
அன்பில் வறுமை கொண்டவற்கும்,
துன்பம் கண்டவற்கும்,
தூய தொண்டு செய்ய - மனித
நேயப் பணி மையமானது
நவஜீவனம்
தாய் மனையானது அனைவற்கும்.
தூய்மையைப் பகிர்ந்தோர் மூவர்
தாய் அருளம்மா, அம்மா பேக்கர்,
தந்தை தம்பிராசாப் போதகர்.
தாரகையின் ஒளியென மிளிர்ந்தது
பரந்தன் முல்லைத்தீவு வீதியில் நவஜீவனம்
பரந்து விரிந்தது இரண்டாம் கட்டை முரசுமோட்டையில்.
தாய் மனைக்கு அழகு சேர்த்த இருவர்
சேயாகி விட்டார் இயேசுவின் கரத்துள்.
தாய் மனைக்கு அழகு சேர்த்த ஒரு
தாய் அருளம்மா, அகவை நூறு காண்கின்றார்.
தாயார் பெற்ற எட்டு ஆண்களும்,
பேர, பூட்டப் பிள்ளைகளும்,
தாய் என்ற அன்புறவில் வளர்ந்த
சேய்கள் எண்ணற்றவரும், பேர, பூட்டப் பிள்ளைகளும்
வாயார வாழ்த்துகின்றோம் நவஜீவனக்குடும்பமாக.
தாயே நீங்கள் தந்த அன்புக்கு நன்றி கூறுகின்றோம்.

**பெயருக்குப் பெருமை சேர்த்தவர**

திரு, திருமதி கிச்கொக் போதகர் பெற்ற
செல்வர்கள் இருவர், செல்விகள் ஐவர்.
செல்விகளுள், ஐந்தாவது, அருளம்மா.
பெற்றவர் வைத்த பெயருக்குப்
பெருமை சேர்க்க இயேசு அவருக்கு அருள் செய்தார்.
அருமையான இவர் வாழ்வுக்கு அணிகலனானது
கூர்மையான இறைத்தியானம்,
நேர்மையான ஒழுக்கம்,
நீதியான ஒப்படைப்பு வாழ்வு.
ஆன்மீகத்தின் வேர் ஆனது இம்மூன்றும்,
அகவை நூறு காண வைத்தது.
அன்பன் இயேசுவுக்கு வாழ்த்துச் சொல்வோம்

**ஆறுதல் தரும் ஒரு சுமைதாங்கி**

தன் பிள்ளை பாக்கியராசா
வான் வீடு நோக்கிப் பயணமான போது,
ஊன் சோராமல் உடல் வாடாமல்,
மன்னவன் இயேசுவிடம் ஒப்படைத்து,
தன் மகனைப் பாடலுடன் வழியனுப்பி வைத்தார்.
தலைவன் தம்பிராசாவின் சரிவு,
பேத்தி யின், பூட்டனின் நெரிவு,
அருளம்மாவின் விசுவாசத்தை உடைக்கவில்லை,
இடைகட்டி வளர்த்தது.
சுமையோடு நின்ற தன்னவர்க்கும்,
திசை தெரியாது நின்ற மற்றவர்க்கும்,
சுமை தாங்கியானார்.
சுமை தாங்கி அகவை நூறு காண்கிறது,
சுமை சுமப்பவரின் வாழ்வுக்காக.



**வரலாற்றுப் பெட்டகம்**

தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்கை,
மரியாள் தெரிந்து கொண்டாள்.
மரியாளின் வழி நின்ற அருளம்மா, அகவை நூறு காண்கின்றார்.
தன் அழகை இழந்தது நவஜீவனம், கானான், உழவனூர்.
புத்தம் தந்த எச்சம், இடிபாடு.
இடிபடவில்லை, அருளம்மாவின் ஆன்மீகம் - அவர்
இறை அறிவின் தெளிவை இழக்கவில்லை.
உறி அறுந்த வெண்ணைச்சட்டி போலாகவில்லை.
நெறி நின்று, வரலாற்றுப் பெட்டகமாய்,
அகவை நூறு காணும் அருளம்மா
விசுவாச வாழ்வின் விழுமியம்,
போராட்ட வாழ்வின் பொக்கிசம் - இயேசுவின்
நேரோட்ட வாழ்வின் நெறி ஆளுகை.
அருளம்மா தம்பிராசாவின் அகவை நூறை,
அருள் நிறைந்த இயேசுவின் பெயரால்,
பரந்துபட்ட நவஜீவனக் குடும்பமாக வாழ்த்துகின்றோம்.
அவர் வாழ்வுக்கு உரம் சேர்த்த
இறைத்தியானம், ஒழுக்கம், ஒப்படைப்பு வாழ்வு
இம்மூன்று முத்துக்களையும், நம் சொத்துக்களாக்கிக் கொள்வோம்.

**இயேசு நாமம் வாழ்க !**

**நவஜீவனப்பிள்ளை (ஆ.வே.இயேசுதாசன்), ஆக்லேன் - உடுவில்**

## கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்



அளவெட்டியை பிறப்பிடமாகவும் ஏழாலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஜோன் துரைராஜா அவர்கள் 12-12-2010 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அன்னார் காலம் சென்றவரான வைலற் நேசமணி மற்றும் பூஸணி ஆகியோரின் அன்புக் கணவரும் அப்பாத்துரை, காலஞ்சென்றவர்களான பூரணம் தவமணி ராஜசேகரம் மற்றும் செல்வராஜா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஜோ நித்ரா, சுமித்திரா, சித்ரா, மோகன், நிஜி, றெஜி, அமுதா, ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் சுகந்தி, செல்வகுமார், பாலச்சந்திரன், காலஞ்சென்ற றெஜினோல்ட் மற்றும் சுதர்சினி நீலா, நிகால் ஆகியோரின் அன்பு மாமனாரும் றோசற், நிரோஸ், பிரசன்னா, பிறேமி, பிரபாகர், சுபாஜினி, சுஜீவன், சுதர்சி, அனிற்றா, அண்ட்ரு, வர்ணா, சண்றின், செலின், டெனிஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும் பிரியதேசின் அன்புப்பூட்டனுமாவார். அன்னாரின் நல்லடக்க வழிபாடு 14-12-2010 அன்று ஏழாலை தெற்கில் நடைபெற்றது. ஏழாலை தெற்கு திருச்சபைப்பொருளாளர் திரு.ஜி.மனோரஞ்சன் இவரது அடக்க ஆராதனையின் போது இரங்கல் உரையாற்றினார். அவர்களின் வாழ்வுக்கும் பணிக்கும் நன்றி நவிலும் வழிபாடு ஏழாலை தெற்கில் உள்ள அன்னாரது மகளான திருமதி.கெலன் நிகால் சுரேஸ்குமார் வீட்டில் 11.01.11 அன்று. சபைப்போதகர் வண.ஜி.டி.மைனசீலன் தலைமையில் நடைபெற்றது.

## கொழும்பு.திருச்சபையின் புதிய நற்செய்தி பணி மையம்

வவுனியாவிலுள்ள தூய பேதுரு பெண்கள் இல்லத்திற்கு கொழும்பு திருச்சபை பெண்கள் சங்கத்தினர் சென்றிருந்தபோது. அங்கிருந்த பிள்ளைகளும் பாதுகாவலரும் அன்போடு வரவேற்றனர். அப் பிள்ளைகளுடன் உரையாடிய போது வன்னி பிராந்திய குரு முதல்வர் அருள்திரு எஸ். குகனேஸ்வரன், வவுனியா தூய பவுல் ஆலய குரு அருள்திரு போல் சுரேஸ் அவர்கள் அந்த இல்லத்தின் தற்போதைய பண நிலை மற்றும் எதிர்நோக்கும் நெருக்கடிகளைப் பற்றி விளக்கினார். தற்பொழுது 30 பெண் பிள்ளைகள் ( 08 வயதிலிருந்து 17வயது வரை) அரசாங்க பாடசாலையில் கல்வி கற்றுவருகிறார்கள். தற்பொழுது எழுந்துள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக பணம் தேட வேண்டிய ஒரு கட்டாயத்திற்குள் தள்ளப்பட்டுள்ளோம். நெருக்கடி காரணமாக இல்லத்தை மூடுவோமாயின் பிள்ளைகள் பெரிதும் பாதிக்கபபடுவார்கள் என்றும் குறிப்பிட்டார். சிறப்பாக இப் பிள்ளைகள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் திரும்பவும் வன்னிப் பிராந்தியத்திற்கு செல்வார்களாயின் பெரிய நெருக்கடியைச் சந்திக்க நேரிடும் என்றும் சுட்டிக்காட்டினார்.

இதனை உணர்ந்த கொழும்புத் திருச்சபை பெண்கள் சங்கத்தினர் தாமாக முன்வந்தும், தமது நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் இத்தேவையை பகிர்ந்து கொண்டதன் விளைவாக அவ்வில்லத்திலிருந்த 20 பிள்ளைகளுக்கான பணத்தேவையை சந்திக்க கூடியதாக உள்ளது. இதற்கு உதவிய அனைத்து பெண்கள் சங்க உறுப்பினருக்கும், ஏனைய அங்கத்தவர்களுக்கும் சிறப்பாக அதன் தலைவி, செயலாளர், பொருளாளர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
கொழும்புத் திருச்சபை இராஜேந்திர குளம், முரசுமோட்டை போன்ற இடங்களில் செய்து வருகின்ற பணியுடன் மேலதிகமாக செய்யும் மற்றுமொரு நற்செய்திப் பணி இதுவாகும்.

## ஒன்றிப்பு வழிபாடும் ஒன்றுகூடலும்

கிறஸ்தவ ஒன்றிப்பு வாரத்தை முன்னிட்டு 11-01-2011 அன்று கல்முனை பிரதேசத்தில் உள்ள திருச்சபைகள் ஒன்றிணைந்த ஒன்றிப்பு வழிபாட்டையும் ஒன்றுகூடலையும் புனித.அந்திரேயா ஆலயத்தில் நடாத்தினர்.

## திருமண சேவை

அன்பின் தாரகை வாசகர்களே!
இன்று கிறஸ்தவ குடும்பங்களின் பல பிள்ளைகளுக்கு ஏற்ற காலத்தில் பொருத்தமான துணைகளை தேடிக்கொள்வதில் பல சிரமங்கள் உள்ளன. இதனால் பல பிள்ளைகள் தம் விசுவாச வாழ்வை இழந்துள்ளனர். இதனை உணர்ந்து இப்பத்திரிகை மூலம் ஓர் பொருத்தமான துணையை தேடிக்கொடுக்கும் சேவையை செய்ய முயற்சிக்கின்றோம்.
ஆகவே தேவையில் உள்ளவர்களின் விபரங்களை உங்கள் போதகருக்கூடாக எமக்கு அனுப்பி வைக்கவும்.

**மட்டக்களப்பு ஓமடியாமடு கிராமத்தில் அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையால் வெள்ளநிவாரணம் கொடுக்கப்படுவதை படங்களில் காணலாம்**



## புதிய மாணவர்களுக்கான அங்குராற்பண நிகழ்வு



பெரிய நீலாவணை புனித அந்திரேயா தொழில் பயிற்சி நிலையத்தில் புதிய மாணவர்களுக்கான அங்குராற்பண (Inauguration & Orientation) நிகழ்வு கடந்த 26-01-2011 அன்று காலை 09:00 தொடக்கம் 01:00 மணி வரை நடைபெற்றது. இந்நிகழ்வில் திட்ட பொது முகாமையாளர் கலாநிதி.தர்சன் அம்பலவாணர் அவர்களும் இயக்குனர் வண.இராஜன் றொகான் அவர்களும் கலந்து கொண்டனர்.

## முதுவாலிபரின் சாட்சிப்பணி

அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் கொழும்பு திருச்சபை முது வாலிபசங்கத்தினர் கிளிநொச்சியிலுள்ள முரசுமோட்டை முன்பள்ளி நிலையத்தை கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக நடாத்திவருகின்றனர் என்பது நீங்கள் அறிந்ததே. முரசுமோட்டையில் அமைந்துள்ள மருத்துவமனைக்கு அருகாமையில் உள்ள கட்டிடத் தொகுதியில் நடாத்திவந்தனர். யுத்தத்தின் காரணமாக கட்டிடத்தின் கூரைப்பகுதி உடைந்து போனதால் தற்பொழுது முரசுமோட்டையிலுள்ள பொதுமக்களுக்கு சொந்தமான கட்டிடத்தில் பல வித நெருக்கடிகள் மத்தியில் இவ்வாண்டின் ஆரம்பத்திலிருந்து நடாத்திவருகின்றனர். ஏறக்குறைய 55 முதல் 60 பிள்ளைகள் இந்த முன்பள்ளியில் கல்விகற்று வருகின்றனர். முரசுமோட்டை முன்பள்ளியின் 2010ம் ஆண்டிற்கான ஒளிவிழாவிலும் கலந்து கொண்டு கிறிஸ்மஸ் பரிசுகளையும், பிள்ளைகளுக்கான புத்தாடைகளையும் வழங்கினார்கள். ஒளிவிழா நிகழ்வில் முது வாலிப சங்கத்தின் பிரதிநிதியாக எமது திருச்சபையின் பொருளாளரான திரு. றோய் விஜயரத்தினம் பிள்ளைகளின் நிகழ்வை பாராட்டி பேசினார். அதனைத் தொடர்ந்து கொழும்புத் திருச்சபைக் குருவான அருள்திரு. தே தேவநேசன் ஆசியுரையை வழங்கியும், பாராட்டியும் பேசினார். வன்னி பிராந்திய குரு முதல்வர் அருள்திரு எஸ். குகனேஸ்வரன் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்தார். மேலும் அவர் பேசியபோது தமக்கு சொந்தமாக ஒரு கட்டிடம் மற்றும். மல சலகூடம் என்பன தேவை என்றும் பிள்ளைகளுக்கான கற்பித்தல் உபகரணங்கள் அவசியம் என்றும் அவ்வுதவிகளைச் செய்யக் கொழும்புத் திருச்சபையினரின் உதவியை நாடுகிறோம் என்ற வேண்டுகோளையும் தெரிவித்தார். இந்த ஆண்டு தொடர்ந்தும் இந்நிலையத்திற்கு உதவி செய்வதாகவும் உங்கள் வேண்டுகோள்களைக் கருத்தில் கொள்வதாகவும் கொழும்பு திருச்சபை குருவானவர் கூறினார். ஒளிவிழாவில் கலந்து கொண்டதன் மூலமும் அந்த முன்பள்ளிக்கு நேரடியாக சென்றதன் நிமித்தமும் அப்பகுதியின் வேலை அவசியம் என்று உணரப்பட்டது.


## வெள்ள நிவாரணம்............

பின் தங்கிய ஓமடியாமடு என்ற கிராம மக்களில் 200 குடும்பங்களுக்கு ரூபா.3150 பெறுமதியான பொதிகள் வழங்கப்பட்டது

**பொதியில் உள்ள பொருட்களின் விபரம்.**

| | |
|---|---|
| அரிசி | 10கி |
| கோதுமை மா | 5கி |
| சீனி | 2கி |
| உ.கிழங்கு | 2கி |
| பருப்பு | 1கி |
| சோயா மீட் | 1கி |
| மிளகாய்த் தூள் | ½ கி |
| தேயிலை | ½ கி |
| பிஸ்கட் | 1 பக்கட் |
| அங்கர் பால் மா | 1 பக்கட் |
| தேங்காய் எண்ணெய் | ½ |
| நுளம்புத்திரி | 1 பெட்டி |
| பற்பொடி | 5 |
| பனடோல் | 1 காா்ட் |
| நெருப்புப் பெட்டி | 2 |
| மெழுகு திரி | 10 |
| லைவ் போய் சவர்க்காரம் | 2 |
| வொண்டர்லைட் சவர்க்காரம் | 2 |
| ரின் மீன் | 1 |

# அபிவிருத்தி பணியில் விசேட தேவையுள்ளோர்





தன் நிறைவான வாழ்வுக்கு வழிகாட்டும் நோக்குடன் இன்று பல தரப்பட்ட மானிட பிரிவுகளையும் நோக்காக கொண்டு, தேவையுள்ள பெரும்பான்மையான இடங்களில், அபிவிருத்திப்பணிகள் நடைபெறுவதனை காணக்கூடியதாக உள்ளது.

ஒரு குறிப்பிட்ட மானிட சமூகம், தனது தேவைகளை அல்லது தனது குறைவுகளை, தானே தெளிவான பார்வையுடனும், பொருத்தமான வளத்துடனும் பூர்த்தி செய்வதற்காக மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளை உண்மையான அபிவிருத்தி எனலாம்.

இவ்வகையான அபிவிருத்திச் செயற்பாடுகளில் விசேட தேவையுள்ளோர்களையும் பங்காளிகளாக, பயனாளிகளாக இணைத்துக் கொண்டு அபிவிருத்திப் பாதையில் முன்னேறும் நோக்கு இன்று காணப்படுவது மானிட வரலாற்றில் ஏற்பட்ட ஒரு மறுமலர்ச்சி அல்லது மேன்மையான நிலை எனலாம்.

விசேட தேவையுள்ளமை எனும்போது ஒரு மனிதன் தானாக செய்யக்கூடிய வேலையில் உள்ள தடை அல்லது இயலும் தன்மையில் உள்ள குறைவு எனலாம். இவ்வாறான தடைகள் அல்லது இயலும் தன்மையில் ஏற்படும் குறைபாடுகளை பின்வருமாறு பிரித்து நோக்கலாம்.

1) **விசேட தேவை**:- வேலை செய்ய பங்களிப்பு மட்டும் உள்ள நிலை- அதாவது இயலும் தன்மையில் உள்ள குறைவு.

2) **ஹன்டிகப்** :- வேலை ஏதும் செய்வதற்கு பங்களிப்பு ஏதும் இல்லாத நிலை.

மேலும் விசேட தேவையுள்ளமை எனும்போது அதனை புலம்சார் விசேட தேவையுள்ளமை, உடல் ரீதியான விசேட தேவையுள்ளமை, விருத்திப் படிநிலையில் உள்ள பின்னடைவு, மனநோய் என பாகுபடுத்தலாம்.

விசேட தேவையுள்ளோருக்கான அபிவிருத்தி எனும்போது மேற்குறிப்பிட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு திறனாய்வு செய்வதன் மூலம் மிகவும் பொருத்தமான அபிவிருத்தி திட்டங்களை பொருத்தமான பயனாளிகளுக்கு முன்வைக்கலாம்.

மேலும் அபிவிருத்திப் பணியில் பங்களிப்புச் செய்யக்கூடிய விசேட தேவையுள்ள நபர்களை இனங்கண்டு அவர்களையும் இணைத்துக் கொள்ளலாம்

அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையும், விசேட தேவையுள்ளோருக்கான அபிவிருத்திப் பணியும்.

அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையானது (CACM) இலங்கையின் வடக்கு, கிழக்கு, மலையகப் பகுதிகளில் விசேட தேவையுள்ளோர் மத்தியில் அபிவிருத்திப்பணியை மேற்கொண்டு வருகிறது.

CACM ன் விசேட தேவையுள்ளோருக்கான பணி தொடர்பான பொதுவான இலக்கு **"சமூக ஆதரவு/ சமுதாய ஆதரவு"** என்பதேயாகும். சமுதாயம் என்பது ஒன்றாக வாழும் அல்லது வேலை செய்யும் மக்களின் கூட்டமாகும். இங்கு ஒருவரை ஒருவர் அறிந்திருப்பதோடு தமக்கிடையில் உறவுகளையும் கொண்டிருப்பர். இவ்வாறான உறவுகளின் அடிப்படையில் ஒருவர் அடுத்தவரின் தேவைகளை புரிந்துகொண்டு தன்னால் இயன்ற உதவிகளை செய்வதை **"சமுதாய ஆதரவு"** எனலாம்.

சமுதாய ஆதரவு என்பது மிகப் பெறுமதி மிக்கது. அறிவு, தெளிவு, புரிந்துணர்வு, துணிவு, பரிவு இல்லாமல் நேர்த்தியான உறவை ஏற்படுத்த முடியாது. ஆகவே சமுதாய ஆதரவு என்னும் பெறுமதிமிக்க விழுமியத்துக்குள் "விசேட தேவையுள்ளோர்களை" ஒருங்கிணைத்த பின்வரும் வழிமுறைகளை நடைமுறைப்படுத்தலாம்.

A) **ஆதரவு கொடுப்பவர் (CACM)**
B) **விசேட தேவையுள்ளோர்.**

1) ஆதரவு கொடுப்பவர்(A) விசேட தேவையுள்ளோரை(B) அறிந்துகொள்ளுதல் B தன்னைப்பற்றியும் அடுத்த B யைப்பற்றியும் அறிந்துகொள்ளுதல்.

2) A, Bயை பற்றி தெளிவு பெறுதல், B யை தெளிவுபெறத் தூண்டுதல்.

3) A, B யை புரிந்துகொள்ளுதல் B தன்னைப்பற்றியும் ஏனைய B க்களைப் பற்றியும் புரிந்து கொள்ளத் தூண்டுதல்

மேற்கூறியவாறு A, B இரண்டும் இணைந்து பரிவு, துணிவு, தெளிவு ஆகிய விழுமியங்களை கற்று உறுதியடைந்து தன்னுடைய வாழ்வை தானே நடத்தும் வகையில் பலப்படுத்துவதே நமது பணி. ஆகவே இதன் அடிப்படையில் அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை விசேட தேவையுள்ளோருக்கான அபிவிருத்திப்பணியை தகுந்த முறையில் திட்டமிட்டு செய்து வருகின்றது.

இதனை நடைமுறைப்படுத்தும் சமூக மட்ட அமைப்பாக பெரியநீலாவணை "புனித அந்திரேயா ஆலய வளாகத்தில்" "House of Care" எனும் அமைப்பு Cerebral Palsy, Down Syndrome, Low vision, Autism போன்ற குறைபாடுகளால் பாதிக்கப்பட்ட சிறுவர், இளையோரை இனங்கண்டு அவர்களை பராமரித்து வருகின்றது. மேலும் அவயவங்கள் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு அவர்களின் கற்றல் செயற்பாட்டை மேம்படுத்தும் வகையில் துணைபுரிகின்றது.

ஆண்டவர் இயேசுவின் பாதையில் விசேட தேவையுள்ளோருக்கு வாழ்வளிக்கும் இத்திருப்பணி தொடர அனைவரும் ஒன்றிணைவோம்.

Rev.Rajan Rohaan
Director
House of Care.

## அராலி திருச்சபையில்........

இவ்வைபவத்தில் அருகாமையில் உள்ள பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் கலந்து சிறப்பித்தனர். அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபைத் தலைவர் வண.அ.ஜெயகுமாரன், சட்டத்தரணி திரு.மனோ தேவசகாயம், யாழ்.பிராந்தியத் தலைவர் வண.வ.இராஜ்குமார், கிறிஸ்தவ இறையியல் கல்லூரி பதில் அதிபர் வண.ஏ.எஸ்.ரி.ஆனந்தன், திட்டப்பணிப்பாளர் வண.ஜெ.எஸ்.அன்டனி சுதாகர் ஆகியோர் வாழ்துச் செய்திகளை வழங்கினர்.

வேதாகம பழைய ஏற்பாட்டு பேராசிரியர் திரு.ஜியோன் என்பவர் ஒரு வாரம் வேதாகம பழைய ஏற்பாட்டு வகுப்புக்களை கிறிஸ்தவ இறையியல் கல்லூரியில் நடாத்தி வருகின்றார். அவரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டது சிறப்புக்குரியது.

## பழைய ஏற்பாட்டு.........

வண.ஜெ.அன்டனி சுதாகர் அவர்களின் ஆரம்ப ஜெபத்தோடு ஆரம்பமான நிகழ்வில் யாழ்.பிராந்தியத்தலைவர் வண.வ.இராஜ்குமார் அவர்கள் அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையின் தலைவர் வண.அ.ஜெயகுமாரன் அவர்களின் வாழ்துச்செய்தியையும் தனது வாழ்த்தையும் தெரிவித்தார். பேராசிரியர் அவர்கள் தன் திருச்சபை சார்பாக வாழ்துச் செய்தியினை தெரிவித்தார்.

இப்பத்திரிகை அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையின் உதயதாரகை பத்திரிகை ஆசிரியரால் இல.373 பிரதான வீதியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு 04-02-2011 அன்று வெளியிடப்பட்டது.